10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka
எதிரொலி
Ethiroli
குரல் 01 அதிர்வு 202 செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 11 2017 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48



இன்று க.பொ.த. சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களுக்கும்

**எதிரொலியின்**

**வாழ்த்துக்கள்...**

# காங்கிரஸ் கட்சியின் தலைவரானார் ராகுல்




சென்னை, டிசெ.12

காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராகுல் காந்தி தெரிவு செய்யப்பட்டார் என் நேற்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

சோனியா காந்தி கடந்த 17 ஆண்டுகளாக கட்சித் தலைவராக

06 ▶

## ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல்

# இராணுவத்துக்கு தொடர்பில்லையாம்!

யாழ்ப்பாணம், டிசெ.12

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு பகுதியில் ஊடகவியலாளர்களை அச்சுறுத்திய சம்பவத்துக்கும் இராணுவத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்தார்.

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு சிங்களமயமாக்கல் தொடர்பாக செய்தி சேகரிக்க 8 ஊடகவியளாலர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை சென்றிருந்தனர். அவர்களைத் தடுத்து நிறுத்திய இராணுவம் பொலிஸாரை அழைத்து அவர்கள் முன்னிலையில் ஊடகவியலாளர்கள் எடுத்த படங்கள், வீடியோக்களை அழித்திருந்தது.

இதனையே இப்போது இராணுவப் பேச்சாளர் மறுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்தச் சம்பவம்தொடர்பில்

06 ▶



# யாழ். வந்தது ரயில் இன்றும் சேவை

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபடும் நகரங்களுக்கு இடையேயான குளிரூட்டப்பட்ட (இன்ரர்சிற்றி) தொடருந்து நேற்று சேவையில் ஈடுபட்டது.

கொழும்பிலிருந்து அதிகாலை 5.45 மணிக்கு சேவையை ஆரம்பித்து யாழ்ப்பாணம் வந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து பிற்பகல் 1.40 மணிக்கு

06 ▶

# முற்றுகை: சம்பந்தனின் இல்லம்

திருகோணமலை, டிசெ. 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எதிர்க்கட்சி தலைவரான இரா. சம்பந்தனின் திருகோணமலை இல்லம் நேற்று முற்றுகையிடப்பட்டது. கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளே இந்த முற்றுகையில் ஈடுபட்டனர்.

வேலை வாய்ப்புக்கோரி கிழக்கு மாகாணத்தில் பட்டதாரிகள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அண்மையில் பட்டதாரிகளை சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்க

06 ▶



## விடுதலைப் புலிகளே

# உலகின் முதல்தர இராணுவம்

## இந்திய அமைதிப் படை தளபதி புகழாரம்

சண்டிகார், டிசெம்பர். 12

உலகின் மிகச் சிறந்த இராணுவங்களில் விடுதலைப் புலிகளும் ஒன்று. அவர்களுக்கு எதிரான போர் இந்திய இராணுவம் பல போர் நுட்பங்களைக் கற்றுக்கொள்ளக் காரணமாக அமைந்தது. அத்துடன் புலிகளுக்கு எதிரான 'ஒப்ரேஷன் பவான்' நடவடிக்கை இந்திய இராணுவத்துக்கு மிகச் சிறந்த படிப்பினையைத் தந்தது. ஆனால் அதற்காக நாம் அதிக உயிர்களை விலையாகக்

06 ▶

# யாழ். பல்கலையில் சிங்கள ஆதிக்கம்




யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்.பல்கலைக்கழக சட்ட பீடத்தின் எட்டாவது பிரிவுக்கு, பெரும்பான்மையாக சிங்கள மாணவர்களே உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் 33 ஆவது பட்டமளிப்பு விழா, கடந்தவாரம் கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்றது. இதில், சட்ட

06 ▶

# தமிழரசுக் கட்சியைக் காப்பது பேரின அரசே!



## உதயசூரியனுக்குத் தாவிய பொன்.காந்தன் பாய்ச்சல்

கிளிநொச்சி, டிசெ.12

" தமிழரசுக் கட்சியை பேரினவாத அரசே பாதுகாக்கிறது. அதனால் நான், தமிழர் விடுதலை கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடவுள்ளேன்" என்று ரெலோவின் கிளிநொச்சி அமைப்பாளர் பொன்.காந்தன்

06 ▶

# வடக்கைப் பின்பற்றுங்கள்



## அரசுக்கு அமைச்சர் அறிவுரை

கொழும்பு, டிசெ. 12

ஊழல், மோசடி இல்லாத ஆட்சியை வழங்க அரசாங்கம் வடக்கு மாகாண சபையை முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும். இதற்காக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மிகமிகப் பாராட்டப்பட வேண்டியவர்.

இவ்வாறு வடக்கு மாகாண சபைக்கு நாடாளுமன்றில் புகழ்மழை பொழிந்துள்ளார் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல.

"ஊழல், மோசடிகள் இல்லாத ஆட்சியை வழங்குவோம் என உறுதியளித்து ஆட்சிக்கு

06 ▶

உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்
உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்



பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்
- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.
SLT RAINBOW PAGES
Print & Digital Directories
உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# மாற்றுத்திறனாளிகள் தினம் முதன்முறையாக வவுனியாவில்

வவுனியா,டிசெ.12

மாகாண மட்ட சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் இதுவரையில் யாழ். கைதடி நவில்ட் பாடசாலையில் நடைபெற்று வந்த நிலையில், முதன்முறையாக வவுனியா கலாசார மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வெளிமாவட்டம் ஒன்றில் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை நடத்துவதற்கு மாகாண சமூகசேவைகள் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணத்தால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. சமூகசேவைகள் திணைக்கள மாகாண பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக 5 மாவட்டங்களைச் சேர்ந்த 5 இளம் வயதினர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஏனைய விருந்தினர்களாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சோமரத்ன விதான பத்திரன, பிரதேச செயலாளர்கள் கே.பரந்தாமன், கா.உதயராசா, கே.சிவகரன், எஸ்.ஜானக உட்பட பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். இதன்போது, விசேட நிகழ்வுகளாக மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி நெல்லி ஸ்ராரின் அனுசரணையில் நடைபெற்ற வினாடி வினாப் போட்டியின் இறுதிச் சுற்று மேடையில் நேரடியாக இடம் பெறவுள்ளது. மேலும் மாகாண மட்ட விழாவில் தமது பிரதேச செயலகங்களில் அளப்பரிய சமூகசேவையாற்றி வரும் சமூகசேவையாளர்களும் அழைத்து கௌரவிக்கப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# கவிழ்ந்தது ஓட்டோ: ஐவர் காயம்

மட்டக்களப்பு,டிசெ.12

கொழும்பு-மட்டக்களப்புப் பிரதான வீதியில் நெடுஞ்சாலை, மயிலம்பாவெளி பிரதேசத்தில் இடம் பெற்ற ஓட்டோ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை படுகாயமடைந்தனர்.

குறித்த ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டையிழந்து வீதி மருங்கிலிருந்த பாலத்துக்குள் பாய்ந்ததிலேயே குறித்த விபத்து நேர்ந்துள்ளது. மேலும் காயமடைந்தவர்கள் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். விபத்தில் ஓட்டமாவடிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஓட்டோச்சாரதி அவரது மனைவி மற்றும் 3 சிறுவர்கள் உட்பட ஐவர் படுகாயமடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(அ)

# வீரவன்சவின் சகாக்கள் மைத்திரியுடன் இணைவு



கொழும்பு, டிசெ.12

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளராக பதவி வகித்த பியசிறி விஜேநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து கொண்டார்.

விமல் வீரவன்சவின் செயற்பாடுகளை விமர்சித்திருந்த பியசிறி விஜேநாயக்க தேசிய சுதந்திர முன்னணியில் இருந்து அண்மையில் நீக்கப்பட்டார். இந்த நிலையில், அந்த முன்னணியின் பிரதித் தலைவரான வீரகுமார திஸநாயக்கவுடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து இருவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அங்கத்துவத்தை பெற்றுக்கொண்டனர்.

வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியில் இருந்து மேலும் சில உறுப்பினர்கள் விலக உள்ள தாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

கட்சியின் முக்கியமான உறுப்பினர்கள் கட்சியில் இருந்து விலகி வரும் நிலையில், விமல் வீரவன்ச கட்சியில் தனித்துப்போகும் அரசியல் நிலைமை உருவாகி வருவதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# இடைக்கால அறிக்கைக்கு ஆணையா? உள்ளூராட்சித் தேர்தல் முடிவே பதில்!

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, டிசெ.12

"இடைக்கால அறிக்கைக்கான ஆணையைப் பெற்றுக் கொள்வதற்காக, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முக்கியமானதொரு பேசுபொருளாக இருக்கிறது" என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலானது குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் முக்கியமான ஒரு காலகட்டத்தில் இந்தத் தேர்தல் நடைபெறுகின்றது. காரணம் இந்த தேர்தல் முடிவடைந்த பிற்பாடு ஐ.நா. மனித வுரிமைப் பேரவையின் கூட்டம் நடைபெற இருக்கின்றது. அதனால் அரசாங்கத்துக்கு முக்கியமான ஒரு தேவை இருக்கிறது.



தமிழ் மக்களினுடைய பிரச்சினைக்கான தீர்வைக் காணுவதற்காக அரசியல் வழிநடத்தல் குழுவால் 73 தடவை கூட்டப்பட்ட கூட்டத்தினுடைய இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த இடைக்கால அறிக்கைக்கான ஆணையைப் பெற்றுக் கொள்வதற்காகத் தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முக்கியமானதொரு பேசுபொருளாக இருக்கிறது.

என்னைப் பொறுத்தவரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இந்த இடைக்கால அறிக்கை தொடர்பான எந்தவித விவாதங்களும் மேற்கொள்ளப்படாமல் தன்னிச்சையாக முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களை ஏமாற்றி அவர்கள் காலாதிகாலமாக அடிமைகளாக இருப்பதற்காக இந்த இடைக்கால அறிக்கைக்கு ஆதரவு வழங்க முடியாது என்ற காரணத்துக்காகவேதான் நாங்கள் வடக்கிலும், கிழக்கிலும் உதயசூரியன் சின்னத்தில் பிரிந்து போட்டியிட்டவுள்ளோம்.

வடக்கு, கிழக்குப் பகுதியில் எமது கட்சியுடன் இணைந்து போட்டியிட பலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். அப்படிப்பட்ட ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை கொள்கை ரீதியாகக் கட்டியெழுப்ப வேண்டிய பெரும் பொறுப்பு எமக்கு இருக்கிறது. அதனை இந்த உள்ளூராட்சி சபை ஊடாக கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்துள்ளோம்" எனவும் அவர் இதன் போது தெரிவித்தார். (அ)

# எதிரணியின் சிறியானி வந்தார் மைத்திரியிடம்!



கொழும்பு, டிசெ.12

கூட்டு எதிரணியைச் சேர்ந்த அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறியானி விஜேவிக்கிரம, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சிறியானி விஜேவிக்கிரம, ஐதேகவுடன் இணைந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியமைத்ததை அடுத்து, மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியுடன் இணைந்து செயற்பட்டு வந்தார்.

எனினும் அண்மைக்காலமாக கூட்டு எதிரணியின் மீது அதிருப்தி அடைந்துள்ள அவர் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து அவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். இதனால் மகிந்த தரப்பின் நாடாளுமன்றில் இன்னும் குறைவடைந்துள்ளது. (அ)

# கள்ளக்காசு அச்சிட்டவர் பொலிஸிடம் மாட்டினர்

திருகோணமலை,டிசெ.12

திருகோணமலை - குச்சவெளி, கும்புருபிட்டிப் பகுதியில் போலி நாணயத்தாள் அச்சிட்டவரை இந்த மாதம் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உத்தரவிடப்பட்டது.

இது தொடர்பான வழக்கு, திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் சுபாஷினி சித்திரவேல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. போலி நாணயத்தாள் அச்சிட்ட குற்றச்சாட்டில், கும்புறுப்பிட்டி, குச்சவெளிப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். குறித்த சந்தேகநபர் குச்சவெளி, கும்புறுப்பிட்டி பகுதியில் போலி நாணயத்தாள் அச்சிட்டு வருவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார்.

இதன்போது போலி நாணயத்தாள் அச்சிடும் இயந்திரம், பிரதி எடுக்கும் இயந்திரம் மற்றும் கணனி, ஆயிரம் ரூபா மற்றும் இரண்டாயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் என்பவையும் கைப்பற்றப்பட்டன. இதனைத்



தொடர்ந்து பொலிஸார் குறித்த சந்தேகநபரைத் திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி Ethiroli
செவ்வாய். 12 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

# என்னா ஒரு அடி..! இன்னும் வலிக்கிறதே!

ஒரு அரசன் செல்லமாக ஒரு நாய் வளர்த்து வந்தான். ஒருநாள் அந்த நாய் இறந்துவிட்டது. அப்போது அரச வையில் இருந்த அமைச்சர்கள் எல்லோரும் வாயிலும் வயிற்றிலும் அடித்துப் புலம்பினர். நாயின் பிணத்தைச் சுமந்து, புதைப்பதற்கு "நீ , நான்" என்று போட்டியிட்டனர். இதைப்பார்த்த அரசனுக்கு ஒருபுறம் நாயை நினைத்துக் கவலையாகவும், தன் அமைச்சர்களை நினைத்துப் பெருமை யாகவும் இருந்தது.

"என் நாய் இறந்ததற்கே இவ்வலவு துக்கப்படும் அமைச்சர்கள் நான் இறந்தால் உடன்கட்டை ஏறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" என தன் பட்டத்துராணியிடம் சொல்லிப் பெருமைப்பட்டான். ஒரு சில வருடங்களில் அர சனும் இறந்து போனான். அப்போது ஒரு அமைச்சர் கூட அழவில்லை. மாறாக, மன்னனின் சொத்துக்களைப் பங்கு போடுவதில் தான் குறியாக இருந்தார்கள். மன்னனின் பிணமோ அநாதையாகக் கிடந்து நாறியது. இப்படி ஒரு குறுங்கதை நம்மிடையே உண்டு.

ஒருவன் இருக்கும் போது அவனைப் புகழவும், அவ னுக்காக உயிரைக் கொடுப்பது போல் நடிக்கவும் ஆயிரம் பேர் இருப்பார்கள். ஆனால் , ஒருவரின் மறைவுக்குப் பின்னர் புகழ்வதற்கு யாரும் இருப்பதில்லை. அப்படி ஒருவனின் இறப்புக்குப் பின்னாலும் அவன் புகழப்படுபவனாக இருப்பின், அவன் சாதாரண மனிதனாக இருக்க முடியாது. அதுவே தன்னுடைய எதிரிகளால் புகழப்படுபவனாயின், அவன் சரித்திரத்தில் இடம்பிடிப்பவனாகவே இருக்க முடியும்.

இலங்கைக்கான இந்திய அமைதிப்படைத்தளபதியின் கூற்றுக்கள் மேற்போந்த விடயத்தையே வலியுறுத்துவதாக இருக்கின்றன.

"உலகின் முதற்தரப் படை ஒன்றோடு சமரிடுவது போல புலிகளோடு மோதும் போது உணர்ந்து கொண் டோம். அவர்களிடம் வாங்கிய அடிதான் இந்திய இராணு வத்தை இன்னும் வலிமையானதாக்கியது" என்று சொல் லியிருக்கிறார், லெப்.ஜெனரல் திபெந்தர் சிங்.

விடுதலைப்புலிகள் அமைப்பை 'சாரம் கட்டிய பெடி யள்' என்றே இலங்கைக்கு வந்த இந்திய அமைதிப் படையினர் எண்ணியிருந்தனர். அதனாலேயே அவர்கள் வெகு அலட்சியமாகப் போரை ஆரம்பித்தார்கள். அத்துடன் சுதுமலையில் வைத்து தங்களின் ஆயுதங்களை புலிகள் கையளித்ததால், அவர்கள் நகம் பிடுங்கப்பட்ட நிலையில் இருப்பார்கள் எனவும் நம்பினார்கள்.

ஆனால் போர் தொடங்கிய சில நாட்களிலேயே இந்தி யாவுக்கு நிலைமை விளங்கிவிட்டது. இருப்பினும் புலி வாலைப் பிடித்தால் விடவா முடியும்? என்ன விலை கொடுத்தேனும் புலிகளை அழிக்க, தன் அசுர சக்தி அத் தனையையும் பிரயோகித்தது. அதன் உச்சக்கட்டமாகவே 'ஒப்ரேஷன் பவான்' என்னும் நடவடிக்கையை இந்திய இராணுவம் ஆரம்பித்து, 1500 பேரை இழந்தது.

பிரேமதாச சொன்னதால் தான் இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு வெளியேறியதாக, பலரும் சொல் கிறார்கள். ஆனால், அப்படிச் சொன்னவுடன் வெளியே றுவதற்கு இந்தியா ஒன்றும் இலங்கையின் கொத்தடிமை அல்ல. உண்மையில் தன்னுடைய கௌரவத்துக்கு இழுக்கு வரக்கூடாது என்பதற்காகவே இந்திய அமைதிப் படை இழப்புகளின் மத்தியிலும் இலங்கையில் நின்றது. இடைநடுவில் ஓடிப்போனால் வாங்கிக் கட்டியது உலகம் முழுக்கத் தெரிந்துவிடுமே. அபோதுதான் பிரேமதாச எடுத்த நடவடிக்கை, இந்திய அமைதிப்படைக்கு பழத்தை நழுவிப் பாலில் விழ வைத்தது. இதுதான் சந்தர்ப்பம் என்று 'பிரே மதாச சொன்னதால் தான் வெளியேறுகிறோம்' என்ற சாட்டுடன் பிடரியில் கால்பட ஓடித் தப்பியது இந்திய அமை திப்படை.

எவ்வளவு காலத்துக்குத்தான் வலிக்காதது போலவே நடிக்க முடியும். 87 இல் வாங்கிய அடி முப்பது வருடங்க ளைத் தாண்டி இன்னமும் இந்தியவுக்கு வலித்துக் கொண்டு தான் இருக்கிறது. அந்த வலியைத்தான் இப்போது திபெந்தர் சிங் தன் வாயாலேயே சொல்லியிருக்கிறார். அப் போது புலிகளைச் சிறு பெடியள் என்று இகழ்ந்த அவரின் வாய், இப்போதுதான் 'உலகின் முதல்தர இராணுவத்தை ஒத்தவர்கள் புலிகள்' என்ற உண்மையை உரைத்திருக் கிறது.

உலகின் முதற்தரப் படையை தனியே சமாளிக்க முடி யாது என்பதால் தானோ கூட்டாகச் சேர்ந்து குழிபறித்தார் கள்?

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# சடலங்கள் எரியூட்ட தடை நீடிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 12

புத்தூர்மேற்கு சிறுப்பிட்டி கலைமதி கிந்துப்பிட்டி மாயானத்தில் சடலங் களை எரியூட்டுவதற்கு விதித்த இடைக் காலத் தடை உத்தரவை வரும் பெப்ரவரி 21ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று நீடித்தது.

புத்தூர் கலைமதி கிராமத்தில் உள்ள மயானத்தை அகற்றுமாறு மயானத்தை சூழ வசிக்கும் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர். அதேவேளை குறித்த மயானத்தில் சடலங்களை எரியூட்டு வதற்கு அனுமதி வழங்க வேண்டும் என ஒரு பகுதியினர் மல்லாகம் நீதி மன்றை நாடி இருந்தனர்.

வழக்கை விசாரித்த மல்லாகம் நீதி வான் அந்தோனிப்பிள்ளை ஜுடசன், மயானத்தை சூழ பத்தடி உயர மதிலைக் கட்டி , சடலங்களை எரியூட்டுமாறும், ஒரு வருட காலத்துக்குள் மின்தகன மயானமாக அதனை மாற்றுமாறும் கட்டளையிட்டிருந்தார். மல்லாகம் நீதிவான் மன்றின் கட்டளைக்கு ஆட் சேபனை தெரிவித்து, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மயானத்தை சூழ வுள்ள மக்கள் சார்பில் சீராய்வு மனுத் தாக்கல் செய்தனர்.

அந்த மனு யாழ்ப்பாண மேல் நீதி மன்றில் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் கடந்த செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்து கொள்ளப் பட்டது. அதன் போது மயானத்தை சூழவுள்ள மக்களும் மன்றுக்கு அழைக் கப்பட்டிருந்தனர்.

மனுவை விசாரணை செய்த யாழ்ப் பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி, "அந்த மயானத்தை அனுமதிப்பதா, நிரந்தர மாக அகற்றுவதா? என்ற முடிவை எடுக் கும் அதிகாரம் வடக்கு மாகாண உள்ளூ ராட்சி அமைச்சருக்கு உண்டு. அந்தப் பகுதியில் வாழும் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு ஆராய்ந்து நடவ டிக்கை எடுக்க மன்று பணிக்கிறது. இந்த வழக்கு முடிவுறும்வரை கிந்துப் பிட்டி மயானத்தில் சடலங்கள் எரியூட்ட தடை விதிக்கப்படும்" என்று கட்டளை வழங்கினார்.

அத்துடன், யாழ். மாவட்ட செய லாளரின் பங்களிப்புக்கள் இதில் எவ் வாறு உள்ளன. அவரால் வழங்கப் படக்கூடிய தகவல்கள் தொடர் பாகவும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் மன்று உத்தர விட்டிருந்தது.

மன்றின் உத்தரவுக்கு அமைய யாழ். மாவட்ட செயலர் சார்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த மனு மீதான விசாரணை யாழ்ப் பாணம் மேல் நீதிமன்றில் நேற்று இடம்பெற்றது.

மனுவின் இடைபுகு மனுதாரராக மற்றொரு தரப்பு ஆவணங்களை இணைத்து தம்மையும் இந்த வழக்கில். இணைத்துக் கொள்ளுமாறு மன்றில் விண்ணப்பம் செய்தனர். இடைபுகு மனுதாரரை இணைப்பது தொடர் பான மனுதாரரின் ஆட்சேபணையை முன்வைப்பதற்கு வரும் பெப்ரவரி 21ஆம் திகதிவரை கால அவகாசத்தை வழங்கிய யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், அன்றைய தினம்வரை வழக்கு விசாணையை ஒத்திவைத்தார். (ச)

# பிணை

கரவெட்டி, டிசெ.12

பொலிஸ் உத்தியோ கத்தரைத் தாக்கிய நபரை 2 லட்சம் ரூபா ஆட்பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித் துள்ளது.

தென்மராட்சிப் பகு தியில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத் தர் ஒருவர் வைபவம் ஒன்றுக்கு சென்றுள் ளார். இதன்போது ஏற்பட்ட தகராறில் பொலிஸ் உத்தியோ கத்தரை உறவினர் தாக் கியுள்ளார்.

இதையடுத்து அவ ரைக் கைது செய்த பொலிஸார் பருத்தித் துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். தாக்கியவரை 2 இலட் சம் ரூபா ஆட்பிணை யில் செல்ல நீதிவான் அனுமதித்தார். (ச -11)

# யாழ்ப்பாணம் வரவிருந்த கேரளக் கஞ்சா பறிமுதல்

நாகபட்டிணம், டிசெ. 12

கடல் வழியாக யாழ்ப் பாணத்துக்கு கடத்தப்பட விருந்த 75 இலட்சம் இந் திய ரூபா மதிப்புள்ள 150 கிலோ கேரளக் கஞ்சாவை தமிழகம் மண்டபம் கடற் கரையில் கைப்பற்றியதாக இந்திய கடலோரக் காவற் படையினர் தெரிவித்தனர்.

'இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையி லேயே இந்தக் கஞ்சா போதைப்பொருள் கார் ஒன்றிலிருந்து கைப்பற்றப் பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது. காரில் பய ணித்தவர்கள் தப்பித்துவிட் டனர்' என்றும் இந்திய கடலோரக் காவற்படையி னர் குறிப்பிட்டனர். (ச)

# பாரதியார் பிறந்தநாள் யாழில் கொண்டாட்டம்







யாழ்ப்பாணம், டிசெ.12

புரட்சிக்கவி மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 135ஆவது பிறந்தநாள் நிகழ்வுகள் நேற்று நல்லூர் துர்க்காதேவி மணி மண் டபத்தில் நேற்று இடம் பெற்றது.

யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வு, துணைத் தூதுவர் ஏ.நடரா ஜன் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். பாரதியார் புகழ் பற்றிய சொற்பொழி வுகள் மற்றும் கலை நிகழ் வுகள் என்பன இடம் பெற்றன. பாரதியார் பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ. இந்தியத் துணைத்தூதரகத் தால் நடத்தப்பட்ட போட்டி களில் வெற்றியீட்டிய மாண வர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அனைத்து மதங்களின் தலைவர்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந் தர் பேராசிரியர் ஆர்.விக் னேஸ்வரன், வடமாகாண ஆளுனரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ். மாநகர ஆணையாளர் ஜெய சீலன், கலைஞர்கள் உள் ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ச- 4)

# கூட்டமைப்புக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், டிசெ.12

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு, கிழக் கில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்புக்கும் ஏனைய மாகாணங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அகில இலங்கை மக்கள் ஜன நாயகக் கட்சி ஆதரவ ளிக்கும் என அக்கட்சியின் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று அக்கட்சியின் அலுவலகத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனை அவர் தெரிவித்தார். (ச)

# கசிப்பு காய்ச்சியவர் விளக்கமறியலில்

கரவெட்டி, டிசெ.12

கரவெட்டியில் கசிப்பு உற்பத்தி செய்து கொண் டிருந்த 22 வயது இளை ஞர் ஒருவரை நெல்லி யடி பொலிஸார் கைது செய்தனர்.

அவரிடம் இருந்து 3 லீற்றர் கோடாவும் கசிப்பு உற்பத்தி செய்யும் பொருட் களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

கைதான இளைஞர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

அவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக் கமறியலில் வைக்குமாறு நீதிவான் நளினி சுபாகரன் உத்தரவிட்டுள்ளார். (ச - 11)



## இன்று நாளும் கோளும்

12.12.2017 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 26 ஆம் நாள்

| | | |
|---|---|---|
| தசமி பகல் 06.00 மணி வரை | ஹஸ்தம் பகல் 11.35 மணி வரை | சித்தயோகம் |
| இராகு காலம் 3.00 - 04.30 | சுபநேரம் 10.45 - 11.15 | எமகண்டம் 09.00 - 10.30 |

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சந்தோசம் | பாராட்டு | கவனம் | இன்பம் | துன்பம் | ஆக்கம் | ஆதாயம் | கீர்த்தி | வெற்றி | உதவி | வீண்செலவு | வாழ்வு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுபெற்ற ஊழியர்களை அழைக்கிறது அரசு

கொழும்பு, டிசெ.12

சேவையாற்ற விரும்பும் ஓய்வுபெற்ற ரயில்வே ஊழியர்களை இலங்கை ரயில்வே தலைமையகத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக, ரயில்வே பொது முகாமையாளர் விஜய சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய ஓய்வுபெற்ற ரயில் எஞ்சின் சாரதிகள், ரயில் பாதுகாவலர்கள், ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் உள்ளிட்டோருக்கே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ரயில்வே சேவை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து



ஊழியர்களையும் கடமைக்கு சமூகமளிக்குமாறு ரயில்வே முகாமையாளர் கோரியுள்ளார்.

இவ்வாறு சமூகமளிக்காதவர்கள் வேலையில் இருந்து நீங்கிச் சென்றதாகக் கருதப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்த விடயத்தை கடந்த சனிக்கிழமை அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், ரயில் சேவைகளை மேலும் சிறப்பாக செயற்படுத்த ஒத்துழைக்க ஓய்வு பெற்ற ரயில்வே ஊழியர்கள் மீண்டும் பணிக்கு வர விரும்பினால், ரயில்வே தலைமையகத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக, ரயில்வே பொது முகாமையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)



## வவுனியா ஏ.ரி.எம்.இல் கொள்ளை முயற்சி

வவுனியா, டிசெ.12

வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெருவிலுள்ள தனியார் வங்கி ஒன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தன்னியக்க இயந்திரத்தை உடைத்துப் பணம் கொள்ளையிட முயற்சிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்றுத் திங்கட்கிழமை காலை வவுனியா பொலிஸ் நிலையத்தில் வங்கியின் முகாமையாளர் முறைப்பாடு ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.

குறித்த முறைப்பாட்டில், நேற்றுமுன்தினம் இரவு தனியார் வங்கியிலுள்ள தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரத்தினையுடைத்துப் பணம் திருட முயற்சிக்கப்பட்டது. எனினும் பணம் திருடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்துப் பொலிஸார் குறித்த வங்கியின் சி.சி.டிவியின் உதவியுடன் சந்தேகநபர்களைக் கைது செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## இந்திய வான்படைத்தளபதி இலங்கையில்!



கொழும்பு, டிசெ.12

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய விமானப் படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் பிரேந்தர் சிங் டனோ, பாதுகாப்பு உயர்மட்டங்களுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்திய விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் பிரேந்தர் சிங் டனோ ஐந்து நாட்கள் அதிகார பூர்வ பயணமாக நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

தனி ஜெட் விமானத்தில் வந்திறங்கிய அவரை விமானப்படைத் தளபதி மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர்.

இதையடுத்து பாதுகாப்பு அமைச்சுக்கு நேற்றுச் சென்ற இந்திய விமானப்படைத் தளபதி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

விமானப்படைத் தலைமையகத்தில், விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் கபில ஜெயம்பதி மற்றும் இராணுவத் தலைமையகத்தில் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அரச உயர்மட்டத் தலைவர்களையும் இந்திய விமானப்படைத் தளபதி சந்திக்கவுள்ளார்.(அ)


# வேலை வாய்ப்பு

யாழ். நகரில் கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு வேலையாட்கள் தேவை.

1) கணினி அறிவுடையோர்
2) கணினி பில் சிஸ்ரம் தெரிந்தவர்
3) கணக்காளர்
4) உதவியாளர் - ஆங்கிலம் தெரிந்தவர்

இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

தொ.பே.: 077 3611 282


## சினிமாப் பாணியில் நடுவீதியில் பிறந்த நாள்

யாழ்ப்பாணம், டிசெ.12

யாழ்ப்பாணத்தில் சினிமாப் பாணியில் பிறந்த நாள் கொண்டாடிய இளைஞர்கள் கோப்பாய் பொலிஸாரினால் நேற்றுத் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர்.

வீதியை மறித்து மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் கேக் வெட்ட முயற்சித்த இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

வீதியை மறிக்கும் வகையில் மோட்டார் சைக்கிள் ஒன்றை நிறுத்தி அதன் மேல் கேக் ஒன்றை வைத்துக் கூர்மையான ஆயுதத்தால் அதனை வெட்டுவதற்குக் குறித்த இளைஞர்கள் முயற்சித்தனர். அதன்போது கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஆவா குழுவுடன் தொடர்புடையவர்களா? என்ற விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாக்கைப் பிடுங்க நாலு கேள்வியள்!

இண்டைக்குக் காலமையே உடம்பு அலுப்பாயிருந்திது. சாதுவா மழைக் குணமும் இருந்திது. பேப்பர்கடைக்குப் போகப் பஞ்சிப்பட்டாலும் தினமும் வாற சகாக்கள் தேடுவினம் எண்டிட்டுப் போன்னான். போகாட்டிலும் முதலி திட்டுவன்.

எலக்சன் நெருங்குதெல்லே அதுக்கேற்ற மாதிரி எங்கடை ஆக்கள் பாயத் துவங்கி விட்டினம். நான் இண்டைக்கு வரைக்கும் அப்பு சொன்னதை நம்பேல்லை. ஆனால் அவர் திருப்பித் திருப்பிச் சொல்லுறவர். “குரங்கிலை இருந்துதான் மனுசர் வந்தவை எண்டு. அதுதான் குரங்குச் சேட்டை மனுசரிலையும் இருக்குது” எண்டு. ஆனால் நேற்றிண்டு பேப்பரைப் பாக்கேக்கைதான் உது உண்மையெண்டு விளங்கிது. என்னடாப்பா? ஒரு மானம், மரியாதை, மற்றவை தங்களைப் பற்றி என்ன நினைப்பினம் எண்டெல்லாம் அரசியல்வாதியள் சிந்திக்கிறதே இல்லையோ? ஏன் உவை இத்தினை சுணைக் கெட்ட சனமாக்கிடக்கு.

இப்ப தாவல் சீசன் எண்டபடியால் சிங்கள, தமிழ், முஸ்லிம் எண்டு பாகுபாடு இல்லாமல் தாவல் நடக்கிது. அப்பிடிக் கட்சி தாவிற ஆக்களைச் சேர்க்கிறவையும் என்னெண்டு நம்பிச் சேர்க்கின மெண்டு தெரியேல்லை. இருக்கும்வரை இருப்பினம். எல்லா வழியிலையும் சாறை உறுஞ்சிக் குடிச்சிட்டு சக்கை வந்திட்டுதெண்ட உடனை “சடார்” எண்டு போட்டிட்டுக் கட்சி மாறுவிடுவினம். எட அதுவரைக்கும் இருந்து, அவையையே கடவுள் எண்டும், அவையின்ரை கட்சி தான் உச்சம் எண்டும், அந்தக் கட்சியின்ரை தலைமையின்ரை கொள்கை தான் திறம் எண்டும் சொல்லிப்போட்டு ஒரு இரவிலை சட்டெண்டு இடம் மாறினால், உதைவிடக் கேவலம் வேறை என்ன கிடக்கிது. கேட்டால் சொல்லினம் “அவர் மக்களுக்குச் சேவை செய்யிறமாதிரி இல்லை” எண்டு. அப்ப இருக்கும்வரை இருந்திட்டு அவரிட்டையே வேண்டித் திண்டிட்டு எலக்சன் வரேக்கைதான் தெரியுது, அவர் சரியில்லை எண்டு என்ன? அதுவரைக்கும் அந்த ஆள் பிழை எண்டு தெரியாமல், ஒரு யோசினை வராத ஆளை நம்பி என்னெண்டு சனம் வோட்டு போடுறது.

என்னெண்டாலும் ரணில் உடைக்கிறதிலை மன்னன். என்னத்தைச் சொன்னாலும் அந்த விசியத்திலை ஆளைக் கேட்டுத்தான். இப்ப எத்தினையை உடைச்சுப்போட்டார். கூட்டமைப்புக்கையே பூந்து விளையாடிப் போட்டாரே. என்ன மாதிரி காலம் மாறிக் கிடக்கெண்டதைப் பாருங்கோவன். எங்கையோ கிடந்த சங்கரியைக் காத்தடிச்சுக் கொண்டு வந்து முகப்பிலை விட்டிட்டாங்கள். வாயாலை வாண வேடிக்கை காட்டிக் கொண்டு இருந்த சுரேஸ் சட்டெண்டு கஜேந்திர குமாரைக் கலியாணம் செய்து முதலிரவுக்கு முன்னம் டிவோஸ். இஞ்சை இருக்கப் பயந்து ஓடின வரதர் வந்து புது மாப்பிளை மாதிரி கோட்டைக்கையே பூந்திட்டார். பூந்தவர் சுரேஸுக்க நக்கல் விட்டுக் கொண்டிருக்கிறார். “அவர் கூடாது, இவர் கூடாது” எண்டு சொல்லிக் கொண்டிருந்த சுமந்திரன், “வரதரைச் சேத்தது ஏன்?” எண்டு வாய் திறக்கேல்லை. ஏனெண்டால் அவர் வந்தது பெரிய பின்னணியோடை. அதைப் பற்றி வாய் திறந்தால் சிலவேளை, “தன்ரை சீட்டும் கிழிஞ்சுபோம்” எண்ட பயம் அந்தாளுக்கு. எந்தளவு குளிர் காயேலுமோ, அந்தளவுக்குக் குளிர் காயப் பழக்கப்பட்டிட்டினம் அரசியல் செய்யிற எல்லாரும். உதுக்கை நல்லது, கெட்டது எண்டு ஒண்டும் இல்லை. கூட்டிக்கழிச்சுப் பாத்தால் எல்லாத்தின்ரை அந்தலையளும் ஒண்டுதான்.

தமிழரசுக்கட்சி தொட்டு கூட்டமைப்பு வரை சொன்னதெல்லாம் பொய்யெண்டு பாக்கத் தெரியேல்லையோ. அவை சொத்துச் சுகத்தை அனுபவிக்கினமெண்டு பாக்கத் தெரியேல்லையே. பதவிக்கு வந்தவைக்கு பஜரோ என்னத்துக்கு. சாதாரண காரிலை போனால் ஒண்டும் நடக்காதே அரசாங்கச் செலவிலை எல்லாத்தையும் குடுக்கிறது மக்களுக்கு ஏதாவது செய்வினம் எண்டு. ஆனால் அவை “செய்வினை” செய்து சனத்தை விசரராக்கியெல்லே வைச்சிருக்கினம்.

என்னத்தைச் செய்தாலும் அவை செய்யட்டும். இந்த முறை வெள்ளை வேட்டி சால்வையோடை வீட்டை வருவினந்தானே? நிக்க வைச்சு நாறக் கூடியதா கேள்வி கேக்க இருக்கிறன் பாருங்கோவன். கலியாண வீட்டுக்குச் சாமான், சக்கட்டு வாங்கிறதுக்கு எழுதினமாதிரி ஒரு பெரிய லிஸ்ற் எழுதி வைச்சிருக்கிறன். என்ரை செக்கிற்றரி முதலி தான் எழுதித் தந்திருக்கிறான். நாக்குப் பிடுங்கக் கேப்பன். வாறது வரட்டும். வேனுமெண்டால் அந்த லிஸ்ற்ரைப் போட்டோக் கொப்பி எடுத்துத் தாறன். நீங்களும் கேளுங்கோ. அப்பவாவது திருந்திறாங்களோ எண்டு பாப்பம்.

**- வில்லங்கம் விநாசி**





## தொழில்முயற்சியாண்மைச் செயலமர்வு

கரவெட்டி, டிசெ.12

தொழில் முயற்சியாளர்களுக்கான செயல மர்வு கரவெட்டி பிரதேசசெயலக மண்ட பத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது . இதன்போது உதவிப் பிரதேச செயலர் ரஜீவ் கலந்துகொண்டு புதிய தொழில் முயற்சி யாண்மை சம்மந்தமாக விளக்கமளித்தார். (அ-11)

## அந்தநாள் ஞாபகம்



**12.12.1871**

யாழ்ப்பாணத்தில் முழுமையான சூரிய கிரகணம் அவதானிக்கப் பட்டது. இங்கிலாந்தின் வானியலாளர் நோர்மன் லொக்கியர் தலைமையில் ஒரு அறிவியலாளர் குழு இதனைப் பார்வையிடுவ தற்கு யாழ்ப்பாணம் வந்தது.

## தூக்கில் சடலம்

கொழும்பு,டிசெ.12

கொழும்பு - கொஹுவல பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞரொரு வரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தைச் சேர்ந்த 21 வயது இளை ஞரின் சடலமே கொஹுவல பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் குளியலறையிலிருந்து மீட்கப்பட்டது.இந்த நிலையில் மீட்கப்பட்ட இளைஞரின் சட லம் பிரேத பரிசோதனைகளுக்காக வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர் பான மேலதிக விசாரணைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. (அ)

## நெடுங்கேணியில் யுவதி தற்கொலை

கொழும்பு,டிசெ.12

நெடுங்கேணி - பளம்பாசிப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளம் யுவதி ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் ஞாயிற் றுக்கிழமை மீட்கப்பட்டது.

யோகானந்தராசா கம்சிகா என்ற யுவ தியே தனது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## மத்திய மாகாணத்தில் கல்வியமைச்சர் கைது

கொழும்பு,டிசெ.12

மரண வீடொன்றில் தாக்குதலில் ஈடுபட் டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மத் திய மாகாணக் கல்வி அமைச்சர் மருத பாண்டி இராமேஸ்வரனை நேற்றுத் திங்கட் கிழமை கைது செய்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர். அம்பகமுவ பிர தேச சபையின் முன்னாள் தலைவர் வெள் ளையன் தினேஸ் மற்றும் இ.தொ.கா கட்சி யைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் இருவரும் இதன்போது கைது செய்யப்பட்டனர்.

மஸ்கெலியா, சாமிமலை ஓல்டன் தோட்டத் தில் மரண வீடொன்றில் குறித்த கல்வி யமைச்சரும் அவரது சகாக்களும் சண்டை யில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவத்தில் காய முற்ற ஹற்றன் பிரதேசத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தை ஒருவர் சிகிச்சைக்காக டிக்கோயா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காகக் கண்டிவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில், குறித்த தாக்குதல் சம் பவத்துடன் தொடர்புடையவர்கள் எனப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற முறைப் பாட்டுக்கமையவே குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டனர். (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோஹ்லி - அனுஷ்கா திருமணத்தில் இணைவு



இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோஹ்லியும் பிரபல நடிகை அனுஷ்கா சர்மாவும் நேற்ற திருமண பந்தத்தில் இணைந்தனர்.

இத்தாலியின் மிலன் நகரில் பிரபல ஹோட்டல் ஒன்றில் இருவரின் திருமணமும் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் இருவருக்கும் மிக நெருக்கமான உறவினர்கள் மட்டுமே பங்கேற்றனர்.

இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் கோஹ்லிக்கு ஓய்வு வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் திருமணத்திற்காகவே ஓய்வு பெறுகிறார் என ஊடகங்கள் ஊகம் தெரிவித்திருந்தன.

இதேவேளை, இந்திய அணியின் தென்னாபிரிக்கத் தொடருக்கு முன்பாக திருமண வரவேற்பு நிகழ்வு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச)




## தொடர்ச்சிகள்

### முற்றுகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தார்.

ஆனால் அவர் உறுதிமொழியை நிறைவேற்றவில்லை. இந்நிலையிலேயே நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள் சம்பந்தனின் இல்லத்தை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வீடுகளை எதிர்காலத்தில் முற்றுகையிடுவோம் என்றும் பட்டதாரிகள் இதன்போது குறிப்பிட்டனர். (ச)

### வடுதலைப் புலிகளே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்க வேண்டியிருந்தது.

- இந்திய அமைதிப் படையின் தளபதியாக இருந்த லெப். ஜெனரல் திபெந்தர் சிங் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். இந்திய இராணுவ இலக்கிய விழா கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை சண்டிகாரில் நடந்தது. இதில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், இலங்கைக்கு நாங்கள் ஏன் சென்றோம் என்பது குறித்த தெளிவான நோக்கத்தை இந்திய அரசாங்கம் கொண்டிருக்கவில்லை. விடுதலைப் புலிகளைப் பாதுகாக்கவா? அல்லது இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்கா? என்பதில் குழப்பம் இருந்தது. இது போன்று நாள் ஒரு இராணுவ ஆளுநராக சென்றேனா? அல்லது இந்திய அமைதிப் படையின் கட்டளைத் தளபதியாக சென்றேனா? என்பதிலும் குழப்பம் இருந்தது.

இந்தியா மோதிய எதிரிகளில் விடுதலைப் புலிகள் முதல் தரமானவர்கள். ஒப்ரேஷன் பவான் நடவடிக்கை எங்களுக்கு மிகச் சிறந்த படிப்பினையாக இருந்தது. ஆனால் இதற்கு அதிக விலையை நாம் கொடுக்க நேரிட்டது. 1500 படையினரை இழந்தோம். 3000 பேர் களத்தில் காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர். எனினும் புலிகளுக்கு எதிரான போர் உத்திகள் பின்னாளில் எமக்கு வலுச் சேர்த்தன - என்றார். (ச)

### தமிழரசுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.கிளிநொச்சி தமிழர் விடுதலை கூட்டணி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

“தமிழரசுக் கட்சியின் தலைவராக தற்போது ரணிலே உள்ளார். பதில் தலைவராக மட்டுமே சம்பந்தன் உள்ளார். கடந்த காலங்களில் பேரினவாத அரசுக்கு எதிராக நாம் போராடிவந்தோம். இன்று அவ்வாறில்லை.

அதே பேரினவாத அரசே இன்று தமிழரசுக் கட்சியைப் பாதுகாத்து வருகின்றது. யாழில் தீர்க்க வேண்டிய பிரச்சினையை கொழும்பில் தீர்க்கும் அளவுக்கு இன்றைய அரசியல் காணப்படுகின்றது.தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்தால் நாம் அரசுக்கு மீண்டும் அடிமையாகிவிடுவோம்.

தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்தால் அது நமக்கு சாபக்கேடு. இன்று அரசியல் மாற்றம் ஒன்று தேவைப்படுகின்றது. ரெலோ அமைப்பு வெளியேறுவதாக தெரிவித்து மீண்டும் கொழும்புக்குச் சென்ற பின்னர் மீண்டும் கூட்டமைப்பில் சேர்ந்தமை கவலையே. இது தொடர்பில் நான் அடைக்கலநாதன் உள்ளிட்டோர்க்கு தெரிவித்திருந்தேன்.தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்தால் பௌத்த பேரினவாதத்துக்கு வாக்களிக்கின்றோம் எனபதையும், ஒரே நாடு ஒன்ற நிலைக்கு வாக்களிக்கின்றோம் என்ற நிலைக்கும் தள்ளப்படுவோம் எனவும் அவருக்குத் தெரிவித்தேன்.இந்நிலையிலேயே நான் தமிழர் விடுதலை கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட முடிவெடுத்துள்ளேன். மக்கள் நிலைமையை முழுமையாக அறிந்துள்ளார்கள்.இன்றைய சூழலில் அரசாங்கத்துக்கு முண்டு கொடுக்க நினைக்கும் தமிழரசு கட்சிக்கும், தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் பதிலடி கொடுக்க வேண்டிய காலத்துக்குள் சென்றுள்ளோம். அடுத்த தலைமுறைக்காக ஆனந்தசங்கரி ஐயா தனது கட்சியின் சின்னத்தினை பொது சின்னமாக்க விட்டுக்கொடுப்புச் செய்துள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தினைச் சரியாகப் பயன்படுத்தி நாம் செயற்பட வேண்டும்.” என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

### யாழ். வந்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு திரும்பியது. பயணிகளுக்கான ரிக்கெட் தொடருந்தின் உள்ளே வழங்கப்பட்டது.

ரயில் திணைக்கள ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பு இடம்பெற்றாலும் இன்றும் இந்த தொடருந்து சேவை மட்டும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)

### யாழ்.பல்கலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீடத்தில் கற்கையை முடித்த 60 பட்டதாரிகள் பட்டம் பெற்று வெளியேறினர். இவர்களில் 24 பேர் தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள மாணவர்களாவர்.

யாழ். பல்கலைக்கழக சட்ட பீடம் ஆரம்பிக்கப்பட்டு முதல் ஐந்து பிரிவுகளிலும் தென்பகுதி சிங்கள மாணவர்கள் இணைந்து கொள்ளவில்லை.

எனினும், அண்மைய ஆண்டுகளில் திடீரென சட்ட பீடத்துக்கு அதிகளவு சிங்கள மாணவர்கள் உள்ளீர்க்கப்பட்டு வருகின்றனர். சட்டபீடத்தின் எட்டாவது பிரிவில் சிங்கள மாணவர்களே அதிகளவில் கற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

### காங்கிரஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தார். சமீபகாலமாக அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கட்சியின் துணைத் தலைவரான ராகுல் காந்தியை தலைவராக்க வேண்டும் என்று காங்கிரஸ் நிர்வாகிகள் வலியுறுத்தினர்.

நிர்வாகிகள் தேர்தல் நடந்து முடிந்ததையடுத்து, தலைவர் பதவிக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. தலைவர் பதவிக்கு கடந்த 1 ஆம் திகதி வேட்புமனு தாக்கல் தொடங்கியது. ராகுல் காந்தி கடந்த 4 ஆம் திகதி வேட்புமனுவை தாக்கல் செய்தார். மொத்தம் தாக்கலான 89 வேட்பு மனுக்களும் ராகுலை தலைவர் பதவிக்கு அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டன.

ராகுல் தவிர வேறு யாரும் வேட்பு மனு தாக்கல் செய்யாததால் அவர் போட்டியின்றி தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார் என அறிவிக்கப்பட்டது. (ச)

### வடக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த நல்லாட்சி அரசாங்கம் நேர் எதிராகவே நடக்கிறது. வேலை வாய்ப்பில் அனைவருக்கும் சமமான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். இதனால் ஆட்சியைத் தொடரும் உரிமையை இழந்து விட்டது” என்றும் இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கும் பெயர் பட்டியலுக்கும் இனி அரச வேலை வாய்ப்பு வழங்கப்படும் என மத்திய அரசு அறிவித்திருந்தது. இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

அரசியல் ரீதியான நியமனங்கள் வழங்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இலங்கையின் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ள சம உரிமையைக் கேள்விக்குள்ளாக்கும் மிக மோசமான செயல் இது. வடக்கு மாகாண சபை ஆட்சியை தொடங்கியதுமே அரசியல் ரீதியான நியமனங்களை நிறுத்தி விட்டது. இது பாராட்டப்பட வேண்டும். முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வனும் மிகமிகப் பாராட்டப்பட வேண்டியவர்.

எந்தப் பணி நியமனமாக இருந்தாலும் போட்டிப் பரீட்சை ஊடாகவே வாய்ப்பு வழங்கப்படுகின்றது. அரசியல் நியமனங்களை வழங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் தலைகீழாக நின்றும் முதலமைச்சரின் உறுதியான நிலைப்பாட்டால் அது நடக்கவில்லை. இப்போதும் வடக்கு மாகாண சபையின் நியமனங்கள் ஒப்பீட்டளவில் மிக நேர்மையாகவே நடக்கின்றன. கட்சி சார் நியமனங்கள் எவையும் வழங்கப்படவில்லை. அரசாங்கம் இந்த முன்னுதாரணத்தைப் பின்பற்ற வேண்டும் - என்றார். (ச)

### இராணுவத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு இராணுவ கட்டளைத் தளபதியிடம் விசாரித்த போது , “இராணுவத்தினருக்கும் இச் சம்பவத்துக்கும் தொடர்பில்லை. அந்த இடத்துக்கு சிவில் உடையில் இராணுவத்தினர் செல்லவில்லை. அந்த இடத்தில் சிவில் உடையில் நிற்பவர் இராணுவத்தை சேர்ந்தவர் இல்லை” எனவும் தெரிவித்தார். எனவே இந்த சம்பவத்திற்கும் இராணுவத்தினரும் எந்த தொடர்பில்லை என உறுதியாகத் தெரிவிக்கிறேன் - என்றார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது: “ஊடகவியலாளர்களை அச்சுறுத்தவில்லை. அவர்களே தமது கமராக்களில் இருந்த படங்களை அழித்தனர். சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் முறைப்பாடு செய்யும் பட்சத்தில் அது தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுப்போம்” என்றனர். (ச)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்
- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
எதிரொலி Ethiroli
021 3004848
நிபந்தனை களுக்குட்பட்டது

## மரண அறிவித்தல்

### யோகராஜா தனுஷா



தோற்றம்: 06.09.1992
இறப்பு: 11.12.2017

மட்டுவில் மத்தி சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோகராஜா தனுஷா 11.12.2017 நேற்றுக் காலமானார்.

அன்னார் யோகராஜா - மைதிலி தம்பதியரின் மகளும், தீசன் (டோகா), காலஞ்சென்ற தீபன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக மட்டுவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் மத்தி,
சிவன்கோவிலடி
தொ.பே.: 0773015349


தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli



# ஒல்லியானார் லக்ஷமி




சென்னை,டிசெ.12

தனது உடல் எடை அதிகரித்தமையால் பட வாய்ப்புக்களை இழந்த லக்ஷமி மேனன், தற்போது தனது உடல் எடையைக் குறைத்துள்ளார்.

லட்சுமி மேனன் தமிழ் சினிமாவில் பல படங்களில் நடித்து வந்தார். இவர் நடித்த பல படங்கள் ‘ஹிட்’ வரிசையில் இடம் பிடித்தன. ஆனால், இவரின் உடல் எடை கூடியதால் பட வாய்ப்புப் பாதியாகக் குறைந்தது. மேலும், தன் பள்ளிப் படிப்பை முடித்துக் கல்லூரிப் படிப்பில் கவனம் செலுத்தி வந்தார்.

ஆனால், என்ன ஆனது என்று தெரியவில்லை தற்போது ஆளே மாறிவிட்டார். உடல் எடையைக் குறைத்து சமீபத்தில் லட்சுமி மேனன் வெளியிட்ட புகைப்படமொன்று ரசிகர்களை ஆச்சரியப்படுத்தியுள்ளது. மேலும் சமூக வலைத்தளங்களிலிலும் வைரலாகியுள்ளது. (எ)

# தானா சேர்ந்த கூட்டம் சன் டிவி வசம்



சென்னை,டிசெ.12

சூர்யாவின் ‘தானா சேர்ந்த கூட்டம்’ படத்தின் ஒளிபரப்பு உரிமையைப் பிரபலத் தொலைக்காட்சியான சன் டிவி பிரம்மாண்ட தொகைக்கு வாங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சூர்யாவின் ‘தானா சேர்ந்த கூட்டம்’ படத்துக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல எதிர்பார்ப்புள்ளது. விக்னேஷ் சிவன் இயக்கத்தில் உருவாகியுள்ள இந்தப் படத்தின் டிஜிட்டல் உரிமையை அமேசான் நிறுவனமும், தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமையை சன் டிவியும் பிரம்மாண்ட தொகைக்கு வாங்கியிருப்பதாக ஸ்ருடியோ க்ரீன் நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ)



# பூமியின் அடுக்கையை தகர்க்கும் அணுகுண்டு

வடகொரியா,டிசெ.12

வடகொரியா கடந்த செப்ரெம்பர் மாதம் மேற்கொண்ட சக்திவாய்ந்த அணு குண்டுச் சோதனையால் தொடர்ந்து நில அதிர்வுகள் ஏற்பட்டு வருவதாக அமெரிக்கப் புவியியல் ஆய்வு மைய அதிகாரிகள் நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் வடகொரியாவில் ஏற்பட்ட நில அதிர்வுகள் இதனை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். வடகொரியா பொதுவாக அணு குண்டுச் சோதனை மேற்கொள்ளும் பகுதியின் அருகாமையிலிருந்தே நில அதிர்வு உருவானதாகவும்,ஆறாவது முறையாக வடகொரியா மேற்கொண்ட அணு குண்டுச் சோதனையானது பூமியின் அடுக்கையசைத்துள்ளதாகவும், இதனால் இனி இதுபோன்ற நில அதிர்வுகள் தொடரும் எனவும் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# கடும் பனிப்பொழிவு 330 விமானங்கள் ரத்து




பெர்லின்,டிசெ.12

பிரிட்டனின் சில பகுதிகளில் கடுமையான பனிப்பொழிவு நிலவுவதையொட்டி ஜேர்மனியின் பிராங்பர்ட் விமான நிலையத்தில் 330 விமானங்களின் பயணங்கள் நேற்றுத் திங்கட்கிழமை ரத்துச் செய்யப்பட்டன.

குளிர்காலம் தொடங்கிவிட்டதால் வட ஐரோப்பிய நாடுகளில் கடந்த 4 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. மைனஸ் 0 டிகிரிக்கும் கீழ் தட்பவெப்ப நிலை சென்று விட்டதால் கடும் குளிர் நிலவுகிறது. இதனால் தண்ணீர் ஐஸ் கட்டியாக மாறிவிட்டது. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளில் பனி மழை கொட்டுகிறது.

ஜேர்மனியின் வர்த்தக நகரமான பிராங்பர்ட் விமான நிலையம் எப்போதும் பரபரப்பாகவிருக்கும். ஆனால், அங்கு கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதால் விமானப் போக்குவரத்தில் தடை ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு 330 விமானங்களைதும், பல புகையிரதங்களதும் பயணங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. (எ)



# இந்திய மாணவர் மீது அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு

சிக்காக்கோ,டிசெ.12

அமெரிக்காவின் சிக்காக்கோ மாகாணத்தில் படித்து வரும் தெலுங்கானாவைச் சேர்ந்த மாணவர் மீது மர்ம நபர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை துப்பாக்கியால் சுட்டதில் அவர் உயிருக்காபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் உபால் பகுதியைச் சேர்ந்தவர் முகமது அக்பர்.இவர் அமெரிக்காவின் இலினாய்ஸ் நகரில் உள்ள டெவ்ரி பல்கலைக் கழகத்தில் படிக்கிறார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அங்குள்ள சாலையின் நடந்து சென்று கொண்டிருந்த போது, மர்ம நபர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டதில் அக்பர் உயிருக்காபத்தான நிலையில் இலினாய்ஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலும் தனது மகன் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதால், அவரைப் பார்க்க அமெரிக்கா செல்வதற்கு மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அவசர விசா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்பரின் தந்தை கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

# ஆளப்போறான் தமிழனுக்கு கெட்டிமேளம்



சென்னை,டிசெ.12

ஆளப்போறான் தமிழன் பாடலாசிரியர் விவேக் விரைவில் திருமணம் செய்யவுள்ளார்.

தமிழ் சினிமாவுக்கு வந்த ஒரு சில வருடங்களிலேயே உச்சத்தைத் தொட்டவர் பாடலாசிரியர் விவேக். ரஜினி, விஜய் என முன்னணி நடிகர்களின் படங்களுக்குப் பாடல் எழுதியவர் இவராவார். அதைவிடச் சமீபத்தில் மொத்தத் தமிழகத்தையும் கலக்கிய ‘ஆளப்போறான் தமிழன்’ பாடலை எழுதியதும் இவர் தான். இந்த நிலையில் விவேக் விரைவில் திருமணம் செய்து கொள்ளவுள்ளார். இவருடைய வருங்கால மனைவியின் பெயர் ஷரதா.

இவர்களது திருமணம் இரு வீட்டார் சம்மதத்தோடு பேசி முடிக்கப்பட்டுள்ளதோடு ஷரதா விவேக்கின் தங்கை படிக்கும் கல்லூரியில் அவருக்கு முந்தைய கல்வியாண்டில் கற்றவராவார். (எ)

# மீண்டும் ஜம்முவில் நிலநடுக்கம்

ஸ்ரீநகர்,டிசெ.12

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின், இந்தியா-சீனா எல்லையில் அமைந்துள்ள லடாக் பகுதியில் 4.5 ரிக்டர் அளவில் நேற்றுத் திங்கட்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது பூமிக்கடியில் 33 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது.

இந்த நிலநடுக்கம் காரணமாக அந்தப் பகுதியிலுள்ள கட்டடங்கள் குலுங்கியதால், பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறித் தெருக்களில் கூடியமையால் எந்தவித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிகிறது. இருப்பினும் நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிக்கம்!



லா லிகா உதைபந்தாட்டத் தொடரில் பார்சிலோனா அணி, 2-0 என்ற கோல் கணக்கில் வில்லாரியலை வீழ்த்தி புள்ளிகள் பட்டியலில் தொடர்ந்து முன்னிலையைத் தக்க வைத்தது.

ஸ்பெயினில் உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையில் 'லா லிகா' தொடர் நடைபெற்றுவருகிறது. இந்தத் தொடரில் முன்னணி அணிகளான பார்சிலோனா - வில்லாரியல் அணிகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு பலப்பரீட்சை நடத்தின.

சொந்த மைதானத்தில் விளையாடிய வில்லாரியல், பார்சிலோனா அணிக்கு கடும் நெருக்கடி கொடுத்தது. இதனால் முதல் பாதி நேரத்தில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை.

2ஆவது பாதி நேர ஆட்டத்தின் 60ஆவது நிமிடத்தில் வில்லாரியல் வீரர் ரபாசுடா அன்டோய்ன், சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதனால் வில்லாரியல் 10 வீரர்களுடன் விளையாட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதைப் பயன்படுத்திய சுவாரஸ் 72ஆவது நிமிடத்திலும், மெஸ்சி 83ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். இதனால், பார்சிலோனா 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின்மூலம் பார்சிலோனா தொடர்ந்து முன்னிலை பெற்றுவருகிறது. பார்சிலோனா 15 போட்டிகளில் 12 வெற்றிகள், 3 சமநிலைகள் மூலம் 39 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளது.

வாலென்சியா 15 போட்டிகளில் 10 வெற்றிகள், 4 சமநிலைகள், ஒரு தோல்வியின் மூலம் 34 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், ரியல் மாட்ரிட் 31 புள்ளிகளுடன் 4ஆவது இடத்திலும் உள்ளன. (ஐ)





# இக்கட்டில் மே.இ.தீவுகள்

கமில்டன், டிசெ.11

நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி, இக்கட்டான நிலையை எட்டியுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து, முதலாவது இன்னிங்ஸில் 373 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள், நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின்போது 8 விக்கெட்டுகளை இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மீண்டும் நேற்றுத் தனது மிகுதி ஆட்டத்தைத் தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள், மேலதிகமாக 6 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில், 221 ஓட்டங்களுடன் சுருண்டது.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய நியூஸிலாந்து அணி, 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 291 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில் கடைசிவரை ஆட்டமிழக்காது, ரெய்லர் 107 ஓட்டங்களைச் சேர்த்தார். அவருக்கு அடுத்தபடியாக ஆகக் கூடுதலாக வில்லியம்சன் 54 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.

பின்னர், 444 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, மூன்றாம் நாளான நேற்று ஆட்ட நேரம் முடியும்போது 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 30 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

பிராத் வைட் 13 ஓட்டங்களுடனும், ஹோப் ஓர் ஓட்டத்துடனும் களத்தில் நின்றனர்.

இன்று, நாளை என இரண்டு நாட்கள் மீதமிருப்பதால் மேற்கிந்தியத் தீவுகளின் விக்கெட்டுகளைப் பிடுங்கி வெற்றிக் கனியைப் பறிப்பதற்கான சந்தர்ப்பம் நியூஸிலாந்துக்கு அதிகம் உள்ளது.

எனினும், மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர்கள் யாராவது இருவர் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தும் பட்சத்தில் வெற்றிக்கான பாதை மாறக்கூடிய சந்தர்ப்பமும் இல்லாமல் இல்லை. (ஐ)

# ஏன் இந்த அவசரம்?



இலங்கைக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த போட்டியில் பும்ராவின், ஆட்டமிழப்பை நடுவர் தனது விரலை உயர்த்தி அறிவிக்கும் முன்னரே டோனி மீள் பரிசீலனை சைகையைக் காட்டிய வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவி வருகிறது.

பிறகு பும்ரா ஆட்டமிழக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# வஞ்சிக்கப்படும் ரகானே!

இந்திய அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான, ரகானே, இந்தியக் கிரிக்கெட் சபையின் முடிவால் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வருகிறார் என சர்ச்சை எழுந்துள்ளது.

டெஸ்ட் போட்டியில் துணைத் தலைவராக விளங்கும் ரகானே, 5ஆவது வீரராக களம் இறங்குகிறார். ஆனால் ஒருநாள் போட்டியில் அவரது நிலைமை அவ்வாறில்லை. தொடக்க வீரராகத்தான் களமிறக்கப்படுகிறார்.

டோனி காலத்திலிருந்தே ரகானேவுக்கு தொடக்க வீரர்கள் வரிசையில் மட்டும்தான் இடம் என்ற எழுதப்படாத சட்டம் இருந்து வருகிறது. இது விராட் கோஹ்லி தலைமையிலும் தொடர்கிறது.

தற்போது இந்திய அணியில் தொடக்க வீரர்களாக தவான் மற்றும் ரோகித் சர்மா ஆகியோர் களமிறங்கி வருகிறார்கள். இவர்களில் ஒருவர் களமிறங்காவிட்டால்தான் ரகானேவுக்கு இடம் கிடைக்கிறது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் இடம் கிடைத்தபோது அசத்தினார். அந்தத் தொடரில் தொடர்நாயகன் விருதும் கிடைத்தது. ஆனால், இலங்கைத் தொடரில் இடம் கிடைக்கவில்லை.

2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரையொட்டி, இந்திய அணியல் சில பரிசோதனைகள் செய்யப்பட்டன. அப்போதும் கூட ரகானேவை மத்தியவரிசையில் களமிறக்கிப் பரிசோதனை செய்யப்படவில்லை.

நேற்றுமுன்தினம் இலங்கைக்கு எதிராக நடைபெற்ற ஆட்டத்தில், தவான் டக்அவுட்டிலும், ரோகித் சர்மா 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

மேலும், விராட் கோஹ்லி இல்லாத நிலையில் ஷ்ரேயாஸ் அய்யர், மணீஷ் பாண்டே, தினேஷ் கார்த்திக் ஆகியோர் களமிறக்கப்பட்டனர். கோஹ்லி இல்லாத நிலையில்கூட ரகானே களமிறக்கப்படவில்லை.

அந்த ஆடுகளத்தில் ரகானே களமிறங்கியிருந்தால் ஓரளவு தாக்குப் பிடித்து விளையாடியிருப்பார் என்ற கருத்துப் பரவலாகப் பரவி, அதுவே தற்போது சர்ச்சையாக மாறியுள்ளது.

இதுகுறித்து ரோகித் சர்மாவிடம் கேள்வி எழுப்பப்பட்டபோது,

"ரகானே தொடக்க வீரராகத்தான் பார்க்கப்படுகிறார். இது நிர்வாகத்தின் முடிவு" என்று கூறினார். (ஐ)

# இலங்கைக்கு எச்சரிக்கை!

இலங்கை கிரிக்கெட் அணியையும் அதன் பயிற்சியாளர் ஹத்ருசிங்கவையும் கடுமையாக விமர்சித்துள்ளார் பங்களாதேஷ் அணியின் அணித் தலைவரான சகிப் அல் ஹசன்.

சமீபகாலமாக பங்களாதேஷ் கிரிக்கெட் அணி நல்ல முன்னேற்றம் அடைந்து வருகிறது. அதற்கு முக்கிய காரணமாகக் கருதப்பட்டவர் அணியின் பயிற்சியாளராகச் சிறப்பாகச் செயற்பட்ட இலங்கை அணியின் முன்னாள் வீரர் ஹத்துருசிங்க.

பங்களாதேஷ் அணியின் முன்னாள் டெஸ்ட் தலைவர் ரஹிமுடன் ஏற்பட்ட மனக்கசப்பினால் பயிற்சியாளர் பொறுப்பை இராஜிநாமாச் செய்த ஹத்துருசிங்க, இலங்கை அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

இதற்கிடையில், அடுத்தவருடம் ஜனவரி மாதம் இலங்கை- பங்களாதேஷ்- சிம்பாப்வே அணிகளுக்கிடையே முத்தரப்புப்போட்டி நடைபெறவுள்ளது.

இந்நிலையில் பங்களாதேஷ் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சகிப்-அல்-ஹசன், நேற்றுமுன்தினம் அளித்துள்ள பேட்டியில்,

"இலங்கை அணி, ஹத்துருசிங்கவைக் கடத்திச்சென்றுள்ளது. இதனால் எங்களுக்கு எந்தப் பின்னடைவும் ஏற்படப் போவதில்லை. இலங்கைக்கு எதிரான போட்டியில் அவர்களை சரமாரியாக வீழ்த்துவோம்" எனச் சவால்விடும் விதத்தில் பேசியுள்ளார். (ஐ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 12.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.